Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**

Case No CC .NO. 57/2022
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No.5, Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. செந்தில் நாதன் | **தொழில்** | முதுநிலை உதவி மருத்துவர் (ஓய்வு) |
| **த/க பெயர்** | திரு. ஆறுமுகம் | **கிராமம்/ஊர்** | திருப்பத்தூர் |
| **வயது** | 63 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 30th day of June 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமயையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 15.01.2020 அன்று மதியம் 12.30 மணியளவில் இதே மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது கனகா என்ற 75 வயது பெண் நபரை, வசந்தா என்பவர், அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை விசாரித்தபோது, அதே தினத்தில் காலை 10.00 மணியளவில் அவரது நாத்தனாருக்கு தெரிந்த ஒரு ஆண் நபர் ஆட்டுக்கொட்டை அருகே வைத்து கையால் தாக்கியதற்கு சிகிச்சைக்காக வந்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது, அவருக்கு,

1. வலது இடுப்பில் வலி இருப்பதாக கூறினார்.

பின்னர், அவரை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததின் அடிப்படையிலும், பின்னர், எலும்பு முறிவு மருத்துவர் வழங்கிய சான்றில் வலது பந்து மூட்டின் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்தன் அடிப்படையிலும் அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **(அந்த காயச்சான்றிதழ் அ.சாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் காட்டப்படும் பச்சையம்மாள் மற்றும் தங்கவேல் ஆகிய நபர்களுக்கு சொற்ப காயங்கள் ஏற்பட்டதாக வழங்கிய காயச்சான்றிதழ் நான் அளித்தது தான். ( **அந்த காயச்சான்றிதழ்களின் நகல்கள் முறையே என்னால் எ.சா.ஆ 1,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** கரடு முரடான பாதையில் தவறி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

| | |
|---|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. | |
| | KOVENDHAN S<br>JUDICIAL MAGISTRATE NO.II<br>Digitally signed by KOVENDHAN S<br>DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN<br>Location: TIRUPATHUR |
| Signature of Witness | Judicial Magistrate No.II<br>Tirupathur. |